## தலைப்பு 288 - நில அளவைத் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 288 - நில அளவைத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நில அளவைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஜூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியொகத்தரிற்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நில அளவைத் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 ஜுலை 20 திகதிய இலக்கம் 01/2015 கொண்ட அரச நிதிக் கொள்கைகள் சுற்றறிக்கையின் 07 (செயலாற்றுகை அறிக்கையிடல்) பந்தி பிரகாரம் திணைக்களத்தினால் அரையாண்டு வருமான அறிக்கைகளை உரிய காலம் முடிவடைந்த திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் குறித்த சுற்றறிக்கையின் இலக்கம் 02 படிவத்தை பயன்படுத்தி அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேணடிய போதும், மீளாய்வாண்டிற்காக 2003.02.04 (நில அளவை திணைக்களத்திற்கு உரிய கட்டணங்கள்) வருமான குறியீட்டுடன் தொடர்பான வருமான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டுகளின் வருமானம் முறையே ரூபா 155,689,759 மற்றும் ரூபா 163,878,332 ஆக இருந்தன. | வருமானம் தொடர்பான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் தலைமை அலுவலகத்தினால் உரிய பணிகள் செய்யப்படுவதால் சுற்றறிக்கை பிரகாரம் அரையாண்டு அறிக்கைகள் அனுப்பப்படவில்லை. மாகாண மட்டத்தில் வருமான சேகரிப்பு முன்னேற்றத்தை மாதந்தம் அழைப்பித்துக் கொண்டு வருமானம் அறவிடும் போக்குக்கு பிரகாரம் காலாண்டு மற்றும் அரையாண்டுக்கு ஒருமுறை அது தொடர்பாக கவனம் செலுத்தி வருமான எல்லையை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென சுட்டிக்காட்டுகிறேன். எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையானவாறு அறிக்கைகளை அனுப்ப சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அரையாண்டு வருமான அறிக்கைகள் அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நி.பி. 128(2)(இ) பிரகாரம் அவர் பொறுப்பு வகிக்கும் பல்வேறு வருமான தலைப்புக்கள், உப தலைப்புக்களின் கீழ் ஒவ்வொரு நிதியாண்டிலும் ஜுன் 30 ஆம் | அதன் பிரகாரம் உரிய அலுவலர்களின் கவனத்தை செலுத்தி உரிய அறிக்கைகளை கணக்காய்வாளர் | நிலுவை வருமானங்கள் தொடர்பான அரையாண்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதிகளுடன் |

| | | |
|---|---|---|
| திகதியன்று மற்றும் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை வருமானம் தொடர்பான நிலைமையை காட்டும் அரையாண்டு அறிக்கைகள் (நலுவை தொகை இல்லையெனில் ‘‘வெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்’’) தயாரிக்கப்பட்டு முறையே ஜூலை 31 மற்றும் அடுத்த நிதியாண்டின் சனவரி 31 ஆம் திகதிற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் பிரதியொன்று அரச வருமானகொள்ளைகள் மற்றும் பொருளாதார விவகாரத் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட வேண்டிய போதும் 2023 ஏப்ரல் 30 திகதியளவிலும் தொடர்புடைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாயகத்திற்கும் பிரதிகளுடன் எதிர்காலத்தில் அனுப்பி வைக்குமாறு உரிய அலுவலர்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. | அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 22 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இன் 05 பிரிவு பிரகாரம் கடப்பாடுகள் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதன் நோக்கத்தில் அல்லது சேவைகள் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் நோக்கில் வெளி தரப்பினருடன் கைச்சாத்திடப்படும் பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகளுக்கான ஒப்பந்தங்கள்/கட்டளைகளின் பெறுமதியாகவும், பொறுப்புகள் என்பது முறையாக பெற்றுக் கொள்ளப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள் மற்றும் நிறைவேற்றியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தங்களிற்காக மேலும் செலுத்த வேண்டிய பெறுமதியாகவும் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் | ஆண்டு இறுதி நிதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதிலின் போது கடப்பாடுகள், பொறுப்புகள் மற்றும் பொறுப்புகள் மீதியாக 03 நிழல்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டிய போதும் மாகாண சர்வேயர் ஜனரால் அலுவலகங்களால் அழைப்பிக்கப்பட்ட பொறுப்பு அறிக்கைகளில் அது கடப்பாடு மீதியாக மாத்திரம் அறிக்கையிட்டிருந்த போதும் அத் தொகையையே பொறுப்பு மற்றும் பொறுப்பு மீதிகளாகுமென சுட்டிக்காட்டுகிறேன். இதன் பின்னர் இந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கும் போது இந்த தகவல்கள் வெவ் வேறாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடுகிறேன். | எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பொறுப்புகள் கடப்பாடுகளாகக் காட்டப்படக்கூடாது. |

மொத்தத் தொகை ரூபா 45,917,092 ஆன செயல்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளாகக் காட்டப்பட்ட அனைத்து பெறுமதிகள் கடப்பாடுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின ஏற்பாடுகள் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு தேவையான வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்து ஐயவினாகளிற்கு பதிலளிக்கப்படுவதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டிய போதும், அறிக்கையின் 3.9 பந்தியின் பிரகாரம் ஐயவினாகளிற்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | நில அளவை திணைக்களத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது சர்வேயர் ஜெனரல் அலுவலகத்தினால் (பிரதான அலுவலகத்தினால்), 09 மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகங்களினால், 25 மாவட்ட நில அளவை அலுவலகங்களினால், 87 பிரதேச நில அளவை அலுவலகங்களினால் மற்றும் நில அளவை மற்றும் வரைபட நிறுவனம் ஆகிய மொத்த அலுவலக தொகுதிகளினூடாகவே ஆகும். பிரதேச நில அளவை அலுவலக கணக்காய்வினூடாக சமர்ப்பிக்கப்படும் ஐயவினாகளிற்கு பதில் அழைப்பித்துக் கொள்ளும் போது மேலதிக சர்வேயர் ஜெனரல் (கள) மூலம் மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலக மூலம், மாவட்ட நில அளவை அலுவலகத்தின் மூலம் பிரதேச நில அளவை அலுவலகத்திற்கு அறிவித்து பிராந்திய சர்வேயர் அலுவலகங்களுக்கு அறிவித்து மீண்டும் அந்த அலுவல தொடர் முறையினூடாக பரிந்துரைக்கப்பட்ட பதில்களை அழைப்பித்துக் கொண்டு உங்களிடம் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால். இரண்டு வாரங்களுக்குள் அல்லது ஒரு மாதத்தினுள் பதில் அளிப்பது மிகவும் கடினமான பணியாகும். குறிப்பாக 2022.12.31 அன்று பெறப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களைப் பெற்றுக் கொள்கையில் இந்த அலுவலகங்களின் தலைவர்களாக இருந்த பெரும்பான்மையான அலுவலர்கள் இடமாற்றம் அல்லது | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உரிய காலத்தினுள் பதில்கள் எழுதப்பட வேண்டும். |

ஓய்வு பெற்றதன் காரணமாக குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு செய்து பதில்களை வழங்க வேண்டியிருந்ததால் பதில் வழங்குவதில் சில தாமதங்கள் இடம்பெற்ற போதும் 2023.05.31 திகதிக்கு முன்னர் எஞ்சியிருந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கிறேன்.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்க் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்து காட்டப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கா ன தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (அ) திணைக்கள நிலையான கட்டளைகளின் எல்லை கற்கள் தொடர்பான IV அத்தியாயம் | | | | |
| (i) 4.13 மற்றும் 4.14 பிரிவு | இல்லை | நில அளவை உதவியாளர்களைப் பயன்படுத்தி எல்லைக் கற்களை அமைக்கும் போது 1000 இற்கு மேற்பட்ட எல்லை கற்களை அமைக்கும் போது சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளரின் அனுமதியைப் பெற வேண்டிய போதும் பொலன்னறுவை மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தினால் அவ்வாறான அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. | மாகாண சர்வேயர் ஜெனரலிடமிருந்து 1000 இற்கு அதிகமான எல்லைக் கற்களை தயாரிக்கும் போது பெற வேண்டிய அனுமதி தவறுதலாக எழுத்துமூலம் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது. எதிர்காலத்தில் முறையான எழுத்துமூல அனுமதியை பெற்று எல்லைக் கற்களை தயாரிக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | மாகாண நில அளவையாளரின் அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ii) 4.15 பிரிவு | இல்லை | எல்லைக் கற்கள் அமைக்கும் பணிகள் நில அளவை அதிகாரியின் மேற்பார்வையில் கீழ் நில அளவை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டியதுடன், சிமேந்து, மணல் மற்றும் 13 மி.மீ அளவுள்ள சிப் கல் 1:2:3 ஆகிய விகிதத்திற்கு பயன்படுத்தி கான்கிரீட் கலவை தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக அடிக்கடி பரீட்சிக்க வேண்டும். நில அளவை மேற்பார்வையாளரினால் ஒவ்வொரு நாளும் அமைக்கப்பட்ட எல்லைக் கற்களின் எண்ணிக்கையை, எஞ்சியுள்ள பொருட்களுடன் பரீட்சித்து அது தொடர்பாக கணக்கு வைக்க வேண்டியதுடன், கதுருவல, கிரிதலே மற்றும் ஹிகுரக்கொட ஆகிய பிரதேச நில அளவை அலுவலகங்களில் அதன் பிரகாரம் நடவடிக்கை செய்யப்படவில்லை. | இது தொடர்பான தகவல்கள் மற்றும் ஆவணங்களைச் பரீட்சிக்கும் போது அன்னளவாக 42-46 இடையிலான எல்லைக் கற்களை ஒரு சீமேந்து பையினால் தயார் செய்யப்பட்டுள்ளதாக மற்றும் தயாரிக்க முடியுமென அவதானிக்கப்பட்டுள் ளது. எனினும் தயாரிக்கப்பட்ட எல்லைக் கற்களை பேரேடிற்கு உட்படுத்தும் போது மற்றும் எஞ்சியுள்ள பொருட்களை தினசரி பரீட்சித்துப் பார்த்து கணக்கீடு செய்யும் போது மேற்கொண்டுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி இதன் பின்னர் அவ்வாறு இடம்பெறாதவாறு பொறுப்பேற்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | எல்லைக் கற்களை சரியாக கணக்கிட வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 01/2020 கொண்ட 2020 ஆகஸ்ட் 28 திகதய அரச நிதிச் சுற்றறிக்கையின் பத்தி 3.1 மூலம் அறிமுகப்படுத்தப் பட்ட 113 (6) (ஆ) | பணித்தடை செய்யப்பட்ட 06 அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 456,861 மற்றும் சேவையை விட்டுச் சென்ற 102 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,546,630 | பெற்றுக் கொண்ட கடனை செலுத்தி முடிய முன்னர் சேவையை விட்டுச் செல்லல் மற்றும் பணித் தடைக்குட்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை கடன் மீதிகளை தேர்த்தல்கள் தணைக்களம், பிரதேச செயலத்தின் ஊடாக குடியிறுப்பு மற்றும் அவர்களின் சொத்துக்கள் தொடர்பாக உறுதியொன்றை பெற்று சட்டமா அதிபர் அவர்களின் ஊடாக கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டிய | 2021 ஆம் ஆண்டில் நிலவிய நிலுவை கடன் மீதிகளில் 184 நிலுவைகளில் 82 தொடர்பாக நடவடிக்கை எடுப்பதன் மீது 2022 ஆம் ஆண்டளவில் நிலுவையிலுள்ள கடன் நிலுவைகளின் எண்ணிக்கை 102 ஆகுமென சுட்டிக் காட்டுகின்றேன். 1/2020 நிதி சுற்றறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 102 ஆகவுள்ள கடன் மீதி அளவுகளை | கடனை அறவிட நடவடிக்கை எடுத்து அறவிட முடியாதெனில் கடன் மீதிளை கைவிடுவதற்காக எடுக்கப்பட்ட செயற்பாடுகளின் சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் திறைசேரியின் பிரதிச் செயலாளர்/ |

| | | |
|---|---|---|
| போதும் திணைக்களடத்தில் பணித் தடைசெய்துள்ள 06 அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 456,861 அற்விட இயலாதிருந்ததுடன் அவற்றிலிருந்து ரூபா 330,963 அல்லது 72.44 வீதம் 05 வருடங்களுக்கும் மேலான காலப் பகுதிக்கு உரிதென அவதானிக்கப்பட்டது. மேலும் சேவையை விட்டுச் சென்ற 102 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,546,630 அறவிட இயலாதிருந்ததுடன் அவற்றில் ரூபா 2,809,654 அல்லது 61.8 வீதம் 05 வருடங்களுக்கும் மேலான காலப் பகுதிக்கு உட்பட்டவை ஆகும். | குறைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதாக சுட்டிக்காட்டுகிறேன். | திறைசேரி செயலாளருக்கு அனுப்புவதற்கான கோரிக்கையை பொது திறைசேரி அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூர நோக்கும் செயற்பணியும்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| “காணித் தகவல்களை வழங்குவதில் எப்போதும் முன்னோடி” என்ற தூர நோக்கை முதன்மையாகக் கொண்டு “தொழற்திறனுடன் சேவை சாரந்த குழுவினரால் தரமான நிலத் தகவல்களை உறுவாக்குதல் மற்றும் சேவைகளை வழங்குதல்” என்ற செயற்பணியுடன், திணைக்கள நில அளவையாளர்கள் பல்வேறு வகையான நில அளவைகளை மேற்கொள்வதுடன் அதாவது அல்லைக் கற்களை இட்டு நியதிச் சட்ட காரணங்களின் மீது மேற்கொள்ளும் நில அளவைகளுக்கு, மாதாந்த இலக்கு 20 காணித் தொ குதிகள் ஆவதுடன் காணித் துண்டுகள் எனில் 30 ஆக 16 ஆண்டுகளிற்கும் முன்னர் ஸ்தாபித்துக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் (NORMS), நிலஅளவீட்டு | நில அளவையாளர் ஒருவர் மாதத்தில் மேற்கொள்ள வேண்டிய குறைந்தபட்ச பணி அளவுகள் தொடர்பாக இறுதியாக திருத்தப்பட்டுள்ளது கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்பாகும், அதாவது சர்வேயர் ஜெனராலின் கள சபை சுற்றறிக்கை இலக்கம் 06/2007 மூலம் 2007 ஆண்டின் போதாகும். 2015 இன் சர்வேயர் ஜெனராலின் கள சபை சுற்றறிக்கை இலக்கம் 3/2015 மற்றும் 2021 இன் சுற்றறிக்கை இலக்கம் 02/2021 மூலம் மேற்கொள்ள வேண்டிய மாதாந்த பணியின் | நவீன நிலஅளவீட்டு கலைகள் மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப முன்னேற்றத்தை மீளாய்வு செய்து தரமான காணித் தகவல்களை உறுவாக்குதல் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக, 16 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட இந்தத் விதிமுறையை நிகழ்காலத்திற்கு பொறுத்தமான வகையில் மீளாய்வு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| கலைகள் மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் நிகழ்காலத்திற்கு ஏற்ற வகையில் மீளாய்வு செய்திருக்கவில்லை. திணைக்களத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணியின் பிரகாரம் தரமான நிலத் தகவல்களை உறுவாக்குதல் மற்றும் சேவைகளை வழங்குவது புதுப்பிக்கப்பட்டு இருக்காத போதும், 2018 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை நிதிக்கூற்றுக்களில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதன் கீழ் நவீன நிலஅளவீட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திணைக்களம் ரூபா 430 மில்லியனை விஞ்சிய தொகையொன்றை செலவிட்டு இருந்தது. | அளவைத் திருத்தியுள்ளன. இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் அரசாங்க நில அளவையாளர் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கையின் மூலம் முன்னேற்றத்தை வழங்குவதில் காணப்படும் சிக்கல்களை சுட்டிக்காட்டியதன் மீது காணி அமைச்சின் செயலாளரினால் ஒரு சந்தர்ப்பத்தில் அந்த சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவதை நிறுத்துவதற்கும் மற்றைய சந்தர்ப்பத்தில் அதனை தற்காலிகமாக இடைநிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| கடந்த ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி நில அளவை 09 வகைகளின் கீழ் பெறப்பட்ட மொத்த நில அளவை கோரிக்கைகளின் எண்ணிக்கை 98,818 ஆன போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி வரை முடிக்கப்பட்ட எண்ணிக்கை 76,142 ஆகும். அதன் பிரகாரம் அத்திகதியன்று முடிக்கப்படாத எண்ணிக்கை 22,676 அல்லது 22.95 சதவீதம் ஆகும். | நில அளவைத் திணைக்களத்திற்க இணைக்கப்பட்டள்ள அரச நில அளவையாளர்களுக்கு மாதாந்தம் முடிவு செய்ய வேண்டிய வேலை இலக்கு அளவுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களால் அந்த இலக்குகளுடன் தொடர்புடைய வேலைகளை ஒவ்வொறு ஆண்டும் நிறைவு செய்கின்றனர். ஒவ்வொரு நிலஅளவீட்டு கோரிக்கைக்கு உரியதான வேலை அளவுகள் ஒன்றிற்கு ஒன்று சமமற்ற பெறுமானத்தை எடுக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டினுள் முடிவுறுத்த முடியாத அளவிற்கு பாரிய நில அளவீட்டு கோரிக்கைகள் கிடைப்பதும், அந்த நில அளவீடுகளில் எதிர்பார்த்த வேலை அளவுகள் இலக்கிற்குட்பட்ட வேலை அளவுகளை விட பெறும்பாளும் அதிக | முடிவுறுத்தாத நில அளவீட்டுக் கட்டளைகளை உரிய நேரத்தில் நிறைவேற்ற முறையான திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெறுமானமொன்றாதல் போன்ற காரணங்களின் மீது அவ்வொறு ஆண்டிலும் முடிவுறுத்த முடியாது எஞ்சுகின்ற நில அளவீட்டு அளவுகளாகும் என சுட்டிக் காட்டுகின்றேன். | |

**3.3 வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ஒருங்கிணைந்த காணி தகவல் தொகுதியை (Land Information Services System in Sri Lanka) தயாரிப்பதற்கு இராஜதந்திர இணக்கப்பாடு கிடைத்து உள்நாட்டு நிதியிலிருந்து ரூபா 20,000,000 வும் வெளிநாட்டு நிதியத்திலிருந்து ரூபா 174,800,000 வுமாக மொத்தம் ரூபா 194,800,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும் கருதிட்டத்திற்காக, நில அளவைத் திணைக்களத்திற்கு செயல் நடவடிக்கை அங்கீகாரம் கிடைக்காததால் மீளாய்வாண்டினுள் குறித்த கருத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | குறித்த கடன் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு நிதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் 30 நில அளவைக் கருவிகளை [GNSS RECEIVER (8C)] பிறக்கோட்டை பகுதியில் நில அளவைக் கருவிகளை வழங்கும் தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்ய 2021 செப்டம்பர் 15 திகதி ஒப்பந்தம் செய்து அதற்காக செலுத்த வேண்டிய ரூபா 66,000,000 தொகையை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த போதும் குறித்த வழங்குனரினால் அந்த உபகரண இருப்பை வழங்கத் இயலாததன் மீது கட்டளையை இரத்து செய்யப்பட்டதால, இந்த வைப்புத் தொகை 2022 செப்டம்பர் 14 திகதி மீண்டும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு | | |

இருந்தது. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | நில அளவைக் கருவிகளை கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 இன் பிரகாரம் மதிப்பீடொன்று மற்றும் 4.2.2 பிரிவின் பிரகாரம் கால அட்டவணை ஒன்றை தயாரித்து, பிரிவு 2.5.1 (இ) இன் பிரகாரம் பெறுகைகள் குழு முதல் கூட்டத்தில் பெறுகைகள் தொடர்பாக விளம்பர அறிவித்தல் பிரசுரித்தல், கேள்வி விலை ஆவணங்களை விற்றல் மற்றும் திறக்கும் விதம் மற்றும் திகதியை முடிவு செய்தலை பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ள வேண்டிய போதும், 2021 மார்ச் 10 திகதி கூட்டத்தில் கேள்வி விலைகளை கோரும் விதத்தை மாத்திரம் அங்கீகரித்திருந்த போதும் திகதிளை முடிவு செய்திருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் கால அட்டவணையின் திகதிகளினுள் பெறுகைகள் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் பெறுகைகள் பணிளுக்காக வெவ்வேறாக காலப் பகுதிகள் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 பிரிவு பிரகாரம் கேள்வி விலைகள் திறத்தல் உரிய படிவத்தின் படி அறிக்கையிட வேண்டிய போதும், உரிய படிவத்தை பூர்த்தி செய்யும் போது Yes/No என குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பங்களை தெளிவாக அடையாளம் காணக்கூடிய வகையில் குறிப்பிட்டு இருக்கவில்லை. அதாவது ஒன்றின் மேல் ஒன்றாக எழுதப்பட்டமை, அலட்சியமாக செயல்பட்டது, Y/N இற்கு பதிலாக -/+ குறியீடுகள் பயன்படுத்தப்பட்டு மற்றும் கார்பன் பேனாவால் கிரிக்கியிருந்தமை காரணமாக கேள்வி விலைகளை திறக்கும் சந்தர்ப்பத்தில் கவனயீனமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கேள்வி விலைகளை திறக்கும் குழுவால் செய்யப்பட்ட திருத்தங்கள் அந்த படிவத்தில் காணப்படுகின்றன. குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டதால் எதிர்காலத்தில் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க குறித்துக் கொள்ளப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் **Y/N** என குறிப்பிட வேண்டும். |
| (iii) | 2021 செப்டம்பர் 10 திகதி கட்டளை வழங்கப்பட்டவுடன் அதனை உரிய திகதிக்கு முன்னர் வழங்க வழங்குனர் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய போதும், கம்பனி 2021 நவம்பர் 03 முதல் 2021 திசெம்பர் 03 திகதி வரை 5 சந்தர்ப்பங்களில் கடன் பத்திரங்களை திறக்க கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன், கொள்வனவுகளிற்கு கட்டளை வழங்கிய திகதியிலிருந்து கடன் பத்திரங்களை திறப்பது, 53 நாட்கள் முதல் 82 | நாட்டின் கொரோனா தொற்று மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பொது மற்றும் தனியார் துறை அலுவலர்களின் வருகையை மட்டுப்படுத்திமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் முன் அமெரிக்க டொலர்களை போன்றே கடன் பத்திரங்களை விநியோகிப்பதன் கடுமையான கட்டுப்பாடுகள் | வழங்குளரின் செயலாற்றுகை பிணைமுறியை பணமாக்காதது குறித்து விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நாட்கள் கால தாமதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 5 கடன் பத்திரங்களையும் திறக்கும் சந்தர்ப்பத்தில் அமெரிக்க டாலர் ரூபா 203 ஆக இருந்ததுடன், அது 2022 மார்ச் 07 திகதி வரையும் அதாவது உடன்படிக்கை கைச்சாதிட்ட திகதியிலிருந்து சுமாறாக 6 மாத காலமாக மாறாமல் இருந்ததாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறிருந்த போதும் மேற்குறிப்பிட்ட வழங்களை உரிய முறையில் செய்யாததன் மீது வழங்குனரிடமிருந்து ரூபா 6,600, 000 செயலாற்றல் பிணைமுறியை பணமாக்கிக் கொள்ள வேண்டியிருந்த போதும் திணைக்களத்தினால் அதனை மேற்கொண்டிருக்கவில்லை. | காரணமாக பல சந்தர்ப்பங்களில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நினைவூட்டல்களுக்கு பிரகாரமும் கடன் பத்திரங்களை திறக்க பல சந்தர்ப்பங்களில் முயன்றதால் இந்த கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டுகிறேன். | |
| (ஆ) | உடுகம பிரதேச நில அளவை அலுவலகத்தில் உள்ள இலக்கம் WP LE – 3696 கெப் வண்டிக்கு 2021 மார்ச் 19 திகதி கேள்வி விலைகளை கோரி பிரதேச பெறுகைகள் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம், குறைந்தபட்ட விலை முன்வைத்த காலி பிரதேசத்தின் கராஜ் ஒன்றிற்கு ரூபா 904,090 திருத்தத்திற்காக அனுப்பப்ட்டிருந்தது. அரச நிதித் திணைக்கள இலக்கம் 38 கொண்ட மேலதிகத்தின் மூலம் திருத்தப்பட்ட பெறுகைகள் வழிகாடிக் கோவையின் 9.3.1 (ஆ) இன் பிரகாரம் ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற போது அதற்காக அமைச்சின் செயலாளரின் அனுமதியை பெற்று மேற்கொள்ள வேண்டிய திருத்த வேலையொன்றான போதும் அவ்வாறான அனுமதி பெறப்படவில்லை. | சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் சர்வேயர் ஜெனராலின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான அதிகார ஒப்படைப்பு 2021 என்ற தலைப்பில் இலக்கம் SG/BK/C/03/06 மற்றும் 2021.02.25 திகதிய கடிதத்தில் இலக்கம் 20 இன் கீழ் உள்ள விடயங்கள் தொடர்பாக புரிந்து கொள்ளாததன் மீது சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் செயற்பட்ட முறையில் குறைபாடுகள் மற்றும் தவறுகள் இடம்பெற்றுள்ளனவா என குறிப்பாக முடிவு செய்ய தற்போது ஆரம்ப விசாரணை நடத்தப்பட்டு வருவதுடன் அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அமைச்சின் செயலாளரின் மேவுகை அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நில அளவை நடவடிக்கைகளுக்காக 2021 திசெம்பர் 30 திகதி அலகுகொன்று ரூபா 915,000 வீதம் 30 பூரண (Total Station) அளவீட்டு அலகுகளுக்கு ரூபா 27,450,000 செலவிட்டு தெஹிவளை பகுதியில் | 2022 நவம்பர் மாதம் 03 பூரண அளவீடுகளும், 2023.01.17 திகதி 05 பூரண அளவீடுகளும் மேலும் 04 பூரண அளவீடுகள் களத்தின் தேவையான கோரிக்கை | உபகரணங்களை கொள்வனவு செய்த உடனேயே பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலஅளவை உபகரணங்களை வழங்கும் தனியார் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்து 18 அலகுகள் 2022 மே மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையயிலான காலத்திலும், 03 அலகுகள் 2022 நவம்பர் மாதத்தினுள் விநியோகித்து எஞ்சிய 09 அலகுகள் ஒரு வருடத்திற்கும் அதிகமாக விளைவற்ற நிலையில் வைக்கப்பட்டு அவற்றில் 08 உபகரணங்கள் 2023 சனவரி மற்றும் மே 26 காலத்தினுள் பகிர்ந்தளித்து 01 பூரண அளவீடு 2023 மே 26 திகதியளவிலும் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பிரகாரம் விநியோகிக்கப்படவுள்ளது. 2023 ஆண்டினுள் எஞ்சிய உபகரணங்களை களத்தில் விநியோகிக்கப்படவுள்ளது. | |
| (ஆ) | திணைக்களத்தில், கிரிதலே அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்க கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ரூபா 42,343,300 ஒப்பந்த பெறுமதிக்கு ஒப்படைத்து அதனை 2017 இல் பணிகளை ஆரம்பித்து 2022 மே 05 திகதி அதனை முடிவுறுத்தி குறைபாடுகளுடன் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. 2022 ஜூன் 08 திகதி அந்த கட்டிடத்தின் மீது தொடரந்தும் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அந்த அலுவலகத்தின் நில அளவை அதிகாரியினால் நில அளவைத் திணைக்கள உபகரணங்கள் மற்றும் கட்டிட பிரிவின் சிரேஷ்ட நில அளவை அதிகாரியிடம் தெரிவித்திருந்த போதும் 2022 செப்டம்பர் 16 திகதி வரை அக்குறைபாடுகள் சரி செய்யப்படவில்லை. எனினும் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பது தொடர்பில் கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்தத்திற்கு முன்னர், மற்றும் பின் பராமரிப்பு காலத்தினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்கு இணங்கி நடவடிக்கை எடுத்திருந்ததாக மற்றும் அந்த நடவடிக்கைகள் உரியவாறு இடம்பெற்றதா என்பது தொடர்பாக திணக்களத்தினால் மேற்பார்வை, பின்தொடர்தல், தேடுதல் மேற்கொள்ளல் மற்றும் முறையாக நாளாதுவரையான தீர்வை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | கட்டிடத் திணைக்களம் நிர்மாணப் பணிகளை உயர் தரத்துடனும் நல்ல ஆலோசனையுடனும் மேற்கொள்வதால் நிர்மாணப் பணிகள் தொடர்பான மேற்பார்வையிடல் குறித்து ஆலோசனை வழங்கத் தேவை ஏற்படவில்லை. இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் எமது திணைக்களத்தினால் முறையான கண்காணிப்பு, பின்தொடர்தல், தேடுதல் மற்றும் சரியானவாறு நாளாதுவரையாக தீர்வைப் பெற்றுக் கொள்ள தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அனுப்பிய கடிதங்கள் மூலம் உறுதிப்படுவதாக குறிப்பிடுகிறேன். அவ்வாறே கட்டிடத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2022.11.22 திகதி கடிதமொன்றை அனுப்பி நிறுத்தற் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதா என மற்றும் குறைபாடுகளை நிறைவு செய்து தராதமை தொடர்பில் அனைத்து விளக்கங்களையும் தெரிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இரு | அனைத்து குறைபாடுகளையும் சரிசெய்து கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தரப்பினராலும் இனங்காணப்பட்ட குறைபாடுகள் கட்டிடத் திணைக்களத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என கிரித்தலை பிரதேச அலுவலகத்தின் நிலஅளவை அத்தியட்சகர் ஊடாக தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டுகின்றேன். | |
| (இ) | ரூபா 12,030,000 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட குச்சவேலி சுற்றுலா இல்லங்கள் 2016 ஜுன் 26 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தன. அந்த சுற்றுலா இல்லத்திலிருந்து கடற்கறைக்கு செல்லும் பாதையில் இருபக்கமும் வீதி விளக்கு பொருத்துவதற்காக 2022 ஆண்டில் ரூபா 106,296 தொகை செலவிடப்பட்டிந்ததுடன் சுற்றுலா விடுதிகளில் இந்தத் தேவைபாட்டிற்கு விட முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | A மற்றும் B ஆகிய இரண்டு கட்டிடங்களிலும் உள்ள மின்சுற்றுகள் சரியாக இயங்காததுடன் அறைகளில் உள்ள குளிரூட்டிகள் காணப்பட்ட போதும் அவை செயற்படும் நிலையில் இருக்கவில்லை. | இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறேன். | குறைபாடுகளை உடனடியாக பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். |
| (ii) | குளியலறைகளில் நீர்மலர்கள் மற்றும் குழாய் வாய்கள் மூலம் போதுமான நீர் விநியோகம் இருக்கவில்லை. | உபர்ப்புடன் கூடிய நுண்ணிய மணல் கலந்த நீரை விநியோகிக்கப்படுலதால் நீர்மலர்கள் மற்றும் குழாய் வாய்களில் உப்பு மற்றும் மணல் படிவுகள் தொடர்ந்து கட்டப்படுதால் இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு சுற்றுலா விடுதியை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணிச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு விடுதி பொறுப்பாளரிற்கு அறிவுறுத்தல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | குறைபாடுகளை உடனடியாக சரி செய்ய வேண்டும். |

**3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஏற்பட்ட 08 வாகன விபத்துக்களின் மொத்த நட்டம் ரூபா 480,675 மற்றும், 1998 முதல் 2021 ஆண்டு வரை இடம்பெற்ற 17 வாகன விபத்துகள் தொடர்பாக மொத்தம் ரூபா 3,992,991 தொகையும் மற்றும் 1989 முதல் 2022 ஆண்டு வரை அளவீட்டு உபகரணங்கள் மற்றும் ஏனைய சேதங்கள் தொடர்பான 13 சம்பவங்கள் தொடர்பாக மொத்தம் ரூபா 2,285,369 உமாக மொத்தம் ரூபா 6,759,035 ஆன பதிவழிக்கப்படாத மற்றும் அறவிட வேண்டிய முன்கொண்டு செல்லப்படும் மீதிகள் காணப்பட்ட போதும் அந்தத் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. அவ்வாறே அம் மீதியினுள் 03 ஆண்டுகளிற்கும் 09 ஆண்டுகளிற்க்கும் இடைப்பட்ட வீச்சளவிலான ரூபா 2,161,107 தொகையும் 10 முதல் 30 ஆண்டுகள் வரை வீச்சளவிலான ரூபா 1,322,930 ஆக இருந்தன. | நிதிக்கூற்றுக்களில் இழப்புகள் மற்றும் விட்டுவிடல் தொடர்பாக கூற்றின் குறிப்பு இலக்கம் 01 ஆக குறித்த தகவல்கள் பக்கம் இலக்கம் 40 முதல் 43 வரை வெளியிடப்பட்டுள்ளன. | இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்படாததால் அந்த நட்டங்கள் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | எல்லைக் கற்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4.19 இன் பிரகாரம் சரிபிழை பார்ப்பதனை எளிதாக்க ஒவ்வொறு மத்திய எல்லை கற்கள் களஞ்சியத்திலுள்ள எல்லைக் கற்கள், நூறு (100) இன் அலகுகளாக குவிக்க வேண்டியதுடன் அவ்வாறே எல்லைக் கற்கள் கட்டளைச் சட்டத்தின் 4.43, 4.44 மற்றும் 4.45 பிரிவுகளின் பிரகாரம் அவை உடைவது தொடர்பாக ஏற்படும் சேதங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் திருகோணமலை பிரதேச நில அளவை அலுவலகத்தில் எல்லைக் கற்கள் தொடர்பாக பௌதீக பரிசோதித்தலின் போது அவை முறையாக கஞ்சியப்படுத்தி இருக்காதன் காரணமாக கணிசமான அளவு எல்லைக் கற்கள் உடைந்து போவது தொடர்பிலான முறையான கண்காணிப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | நிலையான கட்டளை பிரகாரம் எல்லைக் கற்களை களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும் என உரிய அறிவுறுத்தல்கள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளதுடன் உடைந்துள்ள எல்லைக் கற்கள் தொடர்பாக நிலையான கட்டளை 4.43 இன் கீழ் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | உடைந்த எல்லைக் கற்களுக்கான நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | விமான அளவை நடவடிக்கைகளுக்காக திணைக்களம் 2015 திசெம்பர் மாதம் 31 திகித ரூபா 8,868,900 செலுத்தி உள்ளூர் முகவர் நிறுவனமொன்றில் இருந்து ஆளில்லா விமானம் ஒன்றை (Unmanned Aerial Vehicle) கொள்வனவு செய்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 03 திகதி ஹபரணை பகுதியில் அது இயந்திரக் கோளாறிற்கு உட்பட்டிருந்தது. அது திருத்தப்பட்ட பின்னர் மீண்டும் 2019 ஏப்ரல் 18 அன்று மின் கலமொன்று செயலிழந்தும், 2019 ஜூலை 17 திகதியளவில் ஹைப்பர் எஸ். ஆர் (Hipper SR) டொப் கான் (Top con) வகையின் ஜி.எஸ்.பி (GSP) உபகரணம் செயலிலந்ததும், 2021 மார்ச் 04 திகதிளவில் விமானத்திற்கு வழங்கப்பட்டிருந்த மடிக் கணினித் திரையில் பிடையொன்று இருப்பதாகவும் அறிக்கையிடப்பட்டது. அதன் பின்னர் 2022 ஏப்ரல் 26 திகதி விமானத்தின் இறக்கையில் இணைக்கப்பட்டிருந்த இறப்பர் பட்டி உடைந்து அல்லது கலன்றதால் சேதம் ஏற்பட்டிருந்தது. இந்த விமானத்தை கொள்வனசு செய்து 07 ஆண்டுகள் கடந்துள்ளமை மற்றும் இரண்டரை ஆண்டளவு காலம் இதனை பறக்கவிடாததால் விமானத்தை அகற்றுவதற்கு பொருத்தமென 2023 மே 08 திகதிய சிரேஷ்ட நில அளவையாளர் (விஷேட அளவை மற்றும் தரநிர்ணயம்) இனாலஅறிவிக்கப்பட்டிருந்தது. இந்த விமானம் 2016 முதல் 2022 ஆண்டு வரை 05 சந்தர்ப்பங்களில் செயலிழந்து இருந்ததால் அதனால் பயனுள்ள சேவையை | திருத்தியதன் பின்னர் 2019 ஏப்ரல் 18 திகதி புறப்பட ஆயத்தமான போது இந்த உபகரணத்துடன் வழங்கப்பட்ட உலர் கலம் வீங்கியிருந்ததால் முகவர் நிறுவனத்திடம் 02 உலர் கலங்களை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2019 ஏப்ரல் 21 திகதி இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுவெடிப்பு சம்பவத்தின் காரணமாக சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையினால் அனைத்து ட்றோனர் விமானங்களையும் பறக்கவிடுவதை தடை செய்யப்பட்டது. எனவே பாதுகாப்பு அனுமதி பெறுதல் மற்றும் உலர் கலங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. Hipper SR (Top con) வகை உபகரணப் பகுதியின் தவறை இந்த விமானம் மூலம் புகைப்படம் எடுத்து முன்நடவடிக்கை எடுப்பதற்கு தடையல்லாததுடன் மேற்கொள்ளும் செயல்பாடுகளில் மாற்றம் ஒன்று மாத்திரம் இடம்பெறும்.<br><br>eBee (Drone) கருவியுடன் வழங்கப்பட்ட மடிக்கணினி திரையில் ஒரு பிழை இருந்ததுடன் அந்த பிழையை சரிசெய்துதருமாறு நாங்கள் கோரியிருந்த போதும் அப்பிழையையும் UAV விமானத்தை பறக்கவிட தடையொன்றல்ல என சுட்டிக்காட்டுகிறேன்.<br><br>கலங்களை கொள்வனவு செய்த பின்னர் டிறோன விமானத்தின் இறக்கை இணைக்கப்பட்டிருந்த இறப்பர் பட்டி உடைந்து அல்லது கழன்றதனால் விமானம் தரையிறங்குகின்ற காரணத்தால் அதன் இறக்கையில் இணைக்கப்பட்டிருந்த இறப்பர் பட்டியிற்கு ஏற்பட்ட சேதத்தை திருத்திக் கொள்ள விமானப்படை ட்றோனர் படை அதிகாரியிடம் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>விமானப்படையின் ட்றோனர் படை அதிகாரிகள் விமானத்தின் தவறை வாய்மொழியாக சரி செய்த போதும் அதன் பறக்க வீடும் போதும் | பொருளாதார ரீதியில் பயனுள்ள திணைக்களத்தின் அலுவலர்களிற்கு பராமரிக்கக்கூடிய உபகரணங்களை கொள்வனவு செய்யவும், இவ்வாறான சேவைகளை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் சாத்தியம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடைந்து கொண்டு இருக்காததுடன், அதன் பிரகாரம் இது ஒரு சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது. | சமநிலையில் சிக்கல்கள் ஏற்பட்டு மீண்டும் நிலத்திற்கு இறங்கும் இயலும் அதிகமாகையால் இந்த திருத்தம் பயனளிக்காது என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த விமானத்தின் 90 வீதமான பாகங்கள் இலகு வகையான பிளாஸ்டிக் பொருட்களால் உருவாக்கப்பட்டு உள்ளதாலும் இதன் போது இந்த விமானம் கொள்வனவு செய்யப்பட்டு 07 வருடங்களுக்கு மேலாகியிருந்ததால், முகவர் நிறுவனத்திற்கு சொந்தமாக இருந்கும் இவ்வகை விமானங்கள் தற்போது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாக, டிறோனர் வமானத்தின் இந்த வரை தற்போது சம்பந்தப்பட்ட தாய் நிறுவனத்தினாலும் உற்பத்தி செய்வதில்லை எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.<br><br>இந்த நிலைமையின் கீழ் குறித்த ட்றோனா விமானத்தின் உதிர்ப்பாக திருத்தத்தின் போது, கொள்வனவு செய்ய பாரிய தொகையொன்றை செலவிட வேண்டி ஏற்படுவதால் இதற்காக முகவர் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாதிடல் விளைவற்றதால் உரிய அலுவலர் சபையொன்றை நியமித்து இந்த ட்றோன விமானத்தை பாவனையிலிருந்து அகற்றுவது பொருத்தமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு முதல் 2017 ஆகஸ்ட் 03 திகதி இந்த விபத்திற்குள்ளாகும் வரை, குறித்த காலஎல்லையினுல் தேசிய ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல கருத்திட்டங்களுடன் இன்னும் மேலதிக பணிப் பொறுப்புக்களை பூர்த்தி செய்துள்ளதாக குறிப்பிட முடியும். | |
| (ஆ) | திருகோணமலை பிரதேச நில அளவையாளர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படாது காணப்படும் 07 முன்னேற்பாட்டு முகாங்களிற்காக ஒரு முகாமிற்காக மாதாந்தம் ரூபா 50 வீதம் ஒரு வருடத்திற்கு ரூபா 4,200 தொகை மின்சார சபைக்கு செலுத்துவதுடன் இலக்கம் 162 கொண்ட முன்னேற்பாட்டு முகாமில் 2019 ஆண்டிலிருந்த அலுவலரினால் அதன் நீர் பட்டியலிற்கு கொடுப்பனவு செய்யாத காரணத்தால் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால், | தற்போது இந்த முகாம்கள் முழுமையாக பயன்படுத்தப்படாததால் பாழுதடைந்த நிலையில் இருந்த போதும் அவசர சந்தர்ப்பங்களில் பயன்படுததும் எதிர்பார்ப்பில் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இலங்கை முழுவதிலும் இது போன்ற முன்னேற்பாட்டு முகாம்கள் அதிகளவில் காணப்படுவதால் மற்றும் பல்வேறு பிரதேசங்களிற்கு பல தேவைகளுக்காக தேவைப்படுவதால் தேவைக்கு ஏற்ப கழற்றி அகற்றப்பட்டு பொருத்தமான இடங்களுக்கு வழங்கப்படுகின்றன. அதுவரை மின்சாரத்தை துண்டித்து மீண்டும் மின்சாரத்தை பெறுவதற்கு அதிக செலவு செய்ய நேரிடுவதால் ஒரு | தேவைகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அதனை மீண்டும் நானாது வரையாக்க 2020 நவம்பர் 27 திகதி திணைக்கள ஏற்பாட்டிலிருந்து அதற்காக ரூபா 10,362 செலுத்தப்பட்டு இருந்ததுடன் இது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது. | மாதத்திற்கு ரூபா 50 ஆன நிலையான கட்டணமொன்றை மாத்திரம் செலுத்தி மின் இணைப்பு பேணப்பட்டு வருகிகிறது. இருப்பினும் எதிர்காலத்தில் இந்த தேவைப்பாடுகளை மீளாய்வு செய்து அத்தியாவசிய பணிகளுக்காக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

## 3.8 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதில் வழங்கப்படாமை

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு 2023 ஜுன் 12 பதில் வழங்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 29 திகதிய இலக்கம் PAL/B/SGD/2022/AQ/13 கொண்ட கணக்காய்வு ஐயவினா - காலி நில அளவை அலுவலகங்களில் சொத்துக்கள் பயன்பாடு. | நில அளவை திணைக்களத்தின் செயற்பாடுகள் இடம்பெறுவது சர்வேயர் ஜெனரல் அலுவலகத்தினால் (பிரதான அலுவலகத்தினால்), 09 மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகங்களினால், 25 மாவட்ட நில அளவை அலுவலகங்களினால், 87 பிரதேச நில அளவை அலுவலகங்களினால் மற்றும் நில அளவை மற்றும் வரைபட நிறுவனம் ஆகிய மொத்த அலுவலக தொகுதிகளினூடாகவே ஆகும். பிரதேச நில அளவை அலுவலக கணக்காய்வினூடாக சமர்ப்பிக்கப்படும் ஐயவினாகளிற்கு பதில் அழைப்பித்துக் கொள்ளும் போது மேலதிக சர்வேயர் ஜெனரல் (கள) மூலம் மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலக மூலம், மாவட்ட நில அளவை அலுவலகத்தின் மூலம் பிரதேச நில அளவை அலுவலகத்திற்கு அறிவித்து மீண்டும் அந்த அலுவலக தொடர் முறையினூடாக பரிந்துரைக்கப்பட்ட பதில்களை அழைப்பித்துக் கொண்டு தங்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால் இரண்டு வாரங்களுக்குள் அல்லது ஒரு மாதத்தினுள் பதில் அளிப்பது மிகவும் கடினமான பணியாகும். குறிப்பாக 2022.12.31 அன்று கிடைத்த கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களைப் பெற்றுக் கொள்கையில் இந்த அலுவலகங்களின் தலைவர்களாக இருந்த பெரும்பான்மையான அலுவலர்கள் இடமாற்றம் அல்லது ஓய்வு பெற்றதன் காரணமாக குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு செய்து பதில்களை வழங்க | கணக்காய்வு ஐயவினாகளிற்குக் குறிப்பிட்ட காலத்தினுள் பதில்கள் எழுதப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டியிருந்ததால் பதில் வழங்குவதில் சில தாமதங்கள் இடம்பெற்ற போதும் 2023.05.31 திகதிக்கு முன்னர் எஞ்சியிருந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். | |

**3.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்டுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | சிறு செலவுப் பதிவேடு, எரிபொருள் முற்பணப் பதிவேடு மற்றும் எல்லைக் கல் பதிவேடு ஆகியவற்றிற்கு பொதுவாகப் பயன்படுத்த முடியுமான படிவங்கள் காணப்பட்ட போதும், கிரித்தலை, திருகோணமலை, கந்தளே, பொலன்னறுவை மற்றும் கந்துருவெல ஆகிய பிராந்திய நில அளவை அலுவலகங்கள் அவர்களிற்கு உரியதான படிவங்களை தயாரித்து பயன்படுத்தப்பட்டு இருந்தன. | சிறு செலவுப் பணம், எரிபொருள் முற்பணம் மற்றும ஏனைய முற்பணத்திற்கான திணைக்கள நிலையான கட்டளை அத்தியாயம் i இன் பிரகாரமும் அத்தியாய இலக்கம் iv இன் பிரகாரம் எல்லைக் கற்களை தயாரித்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், தீர்த்தல் போன்ற அனைத்துப் பணிகளையும் சரியாக பேணிக் கொள்ளமாறும் மாகாணத்திற்குரிய அனைத்து பிரதேச நில அளவை அலுவலகங்களையும் அறிவூட்டுமாறும் மாகாண சேர்வேயர் நாயத்தினூடாக அனைத்து சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்களுக்கும் அறவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அலுவலக பரீட்சிப்பின் போதும் தொடர்ந்து பின்னூட்டல் செய்யுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பொதுவான படிவங்களைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொலன்னறுவை சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மின்சாரப் பட்டியல் ஐ.டபிள்யூ.ஏ.எஸ்.விக்கிரமாராச்ச ි, இல.07, மகாவலி வீட்டுக் கட்டிடத் தொகுதி, நவ நகரம், பொலன்னறுவை என்ற நபரின் பெயரிலும், நீர் பட்டியல் ஆர்.எம்.எஸ்.பி. ரத்நாயக்க, இல. 07, மகாவலி வீட்டுக் கட்டிடத் தொகுதி, நவ நகரம், பொலன்னறுவை என்ற நபரின் பெயரிலும், கிடைத்துள்ளதுடன், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மின்சார பட்டியல் ஐ.ஆர்.பி.எஸ். தர்மதாச என்ற | சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ இல்ல நீர் பட்டியல் மற்றும் மின்சார பட்டியலின் பெயரை திருத்தம் செய்து கொள்ள அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நில அளவை திணைக்களத்திற்கு சுவீகரித்துள்ள இந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் முகவரிகளை குறித்த பதவிப் பெயர்களுடன் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நபரின் பெயரிலும், நீர் பட்டியல் நில அளவை அத்தியட்சகர் இலக்கம் 13, பொலிஸ் உத்தியோகபூர்வ இல்லம், பொலன்னறுவை என்ற முகவரியிற்கு கிடைத்து தீர்க்கப்பட்டிருந்தன. திணைக்களத்தின் பெயரில் பட்டியல்களை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட பதவியனியினர், மற்றும் உள்ளவாறான பதவியனியினர்**

| சேவை வகை | அங்கீகரிக்கப்பட்ட எணிணிக்கை | உள்ளவாறான எணிணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எணிணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 1,144 | 951 | 193 | 0 |
| முன்றாம் மட்டம் | 83 | 27 | 56 | 0 |
| இரண்டாம் மட்டம் | 1,172 | 995 | 177 | 0 |
| ஆரம்ப மட்டம் | 4,890 | 3,553 | 1,337 | 0 |
| தற்காலிக (பற்பணி) | 0 | 170 | - | 170 |
| கூட்டுத் தொகை | 7,289 | 5,696 | 1,763 | 170 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்டுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரிற்கு ஒப்பாக சிரேஷ்ட மட்டத்தில் 16 சதவீதமும், மூன்றாம் மட்டத்தில் 67 சதவீதமும், இரண்டாம் மட்டத்தில் 15 சதவீதமும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 27 சதவீதமுமாக மொத்த ஆளணியினர் வெற்றிடங்கள் 24 சதவீதம் காணப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் உடன்படுகிறேன். | வெற்றிடங்களை நிரப்ப அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் கிழக்கு மாகாண நில அளவை அலுவலகத்தில் கணக்காளர் மற்றும் தொழிநுட்ப அலுவலர் ஆகிய இரு பதவிகளும் வெற்றிடமாக இருந்தன. | கணக்காளர் சேவைக்கான வெற்றிடங்களுக்கு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அலவலர்கள் இணைக்கப்பட்டுவதுடன் அந்த அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அந்த வெற்றிடத்தை நிரப்பும் வரை தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் கிழக்கு மாகாண சர்வேயர் ஜெனரல் காரியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவியில் பதில் கடமைக்காக கணக்காளர் III/II தர அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகங்களுக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் சேவை அவசியமில்லை என சுட்டிக்காட்டுகிறேன். | வெற்றிடமாக உள்ள அத்தியாவசிய பதவிகளுக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பது மற்றும் தேவையற்ற பதவிகளை இல்லாது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | திருகோணமலை மாவட்ட நில அளவை அலுவலகத்தில் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர் போன்ற பதவிகளிற்குரிய அனைத்துப் பணிகளையும் வரைபடத் தொழில்நுட்ப அலுவலர் மேற்கொண்டிருந்தார். | ”தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர்” என்பது ஒரு பதவியாகும். தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர் பதவி என்பது வரைபட தொழில்நுட்ப அலுவலர் சேவையின் சிறப்பு சேவை அலுவலர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியாகும். தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர் பதவியில் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது அரச சேவை ஆணைகுழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரம் கிடைக்கும் வரை தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் திணைக்களசார் வேலைத்திட்டமொன்றின் கீழ் திருகோணமலை மாவட்ட நில அளவை அலுவலகத்தில் உள்ள தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அலுவலர் வெற்றிடத்தில் கடமை மேவுகைக்கு வரைபட தொழில்நுட்ப அலுவலர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடமாக உள்ள பதவிகளிற்கு அலுவலர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |